**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை - 2023**
---------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (''சபை'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அது சம்பந்தமாக நிர்வகிக்கின்ற தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்..

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின்

எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்காமை

| இயைபான நியமத்திற்கான தொடர்பு சகிதம் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ).இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பந்தி 57 பிரகாரம், ஊழியர் நலன் கடப்பாட்டைக் கணக்கிடுவதில் நிறுவனம் காப்பீட்டுகணிப்பு முறையைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு காப்பீட்டுகணிப்பு எடுகோள்களை சபை பயன்படுத்துவதாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் கணக்கிடும் பிழை காரணமாக ரூபா146,328,424 ஆக இருக்க வேண்டிய ஊழியர் நலன் பொறுப்பு ரூபா188,634,080 ஆக கணக்கிடப்பட்டு ஆண்டின் இலாபம் ரூபா 3,056,332 இனாலும், பிற விரிவான வருமானம் ரூபா 39,249,324 இனாலும் குறைவாக | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கெடுப்பு சரியானதன்று. உண்மையாக செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகையை விட குறைவான பெறுமானம் அறிக்கையிடப்பட்டுள்ளது. எனினும், நிதிக் கூற்றுக்களின்படி செலுத்த வேண்டிய பணிக்கொடையின் பெறுமானம் சரியானது. | நியமத்தின் ஏற்பாடு பிரகாரம் காப்பீட்டுகணிப்பு முறையைப் பயன்படுத்தி ஊழியர் நலன் கடப்பாட்டைக் கணக்கிடுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கிடப்பட்டு நிதி நிலைமை கூற்றில் ஊழியர் நலன் பொறுப்பு ரூபா 42,305,656 ஆல் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்துவரும் மூலதன அளிப்புகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 10,500,000 ஆன ஊநளள குரனெ எனும் அளிப்பு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பந்தி 26 அல்லது 27 இன்படி காலக் கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த அளிப்பினை காலக்கழிவு செய்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமத்தின் ஏற்பாடு பிரகாரம் காலக்கழிவு சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் ரூபா4,320,000க்கு கொள்வனவு செய்யப்பட்ட ளுயபந 200 மென்பொருளானது சொத்தாகக் கணக்கில் பதியாமல் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், அந்த மென்பொருளை மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் உறப்பட்ட ரூபா1,750,000 மூலதனச் செலவினம் பதிவழிக்கப்பட்டிருந்தது. | ளுயபந 200 மென்பொருளை சொத்துகளுக்குள் சேர்த்து தேய்மானம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கட்புலனாகா சொத்துக்களின் பெறுமதியை சரியாக இனங் காணுவதற்கும், மூலதனச் செலவினங்களை மூலதனமாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) முற்கொடுப்பனவு மீதிகளில் அடங்கிய பெறுமதி ரூபா465,000 ஆன உள்ளூர் ஆயுர்வேத சாறு வகைகளை உற்பத்தி செய்யக்கூடிய பொறியொன்று 2021ஆம் ஆண்டில் சபையினால் நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கையில் நன்கொடையாக கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அது பௌதிக ரீதியாக தீர்க்கப்பட்டிருப்பினும் வவுச்சர்களை சமர்ப்பிக்காத காரணத்தினால் கணக்குகளை தீர்க்க முடியவில்லை. உரிய தீர்க்கும் வவுச்சர் தற்போது கிடைத்துள்ளதால், தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகளை இனங்கண்டு உரிய கணக்குகளுக்கு சரியாக சீராக்க வேண்டும். |
| (இ) 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா2,275,482 முற்பணங்கள் 2024 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டதுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலவாகக் கணக்கில் பதியப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு ஏற்புடைய செலவுகள் 2023 ஆம் ஆண்டில் உறப்பட்டுள்ளன என. அதன்படி செலவு, 2023ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டு, முற்பணக் கணக்குகளும் அதே ஆண்டில் தீர்க்கப்பட்டதென. | முற்பணங்கள் தீர்க்கப்படும் திகதிக்கு நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 சொத்துக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 74,074,924, 02 வருமானக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 27இ797இ748 மற்றும் பொறுப்புக் கணக்கு பெறுமதியான ரூபா 65இ632இ084 மற்றும் நேரொத்த அறிக்கைகள்.்.அட்டவணைகளில் முறையே ரூபா 46,506,226, ரூபா 39இ768இ530 மற்றும் ரூபா 64இ907இ063 ஆக காட்டப்பட்டிருப்பதன்மூலம் மேற்படி மீதிகளுக்கு இடையே ரூபா 40,264,501 வேறுபாடு காணப்பட்டது. | இந்த ஒவ்வொரு மீதிகளை ஒப்பிட்டு சரியான மீதிகளை இனங்காண்பதற்கும் 2024 இறுதி கணக்குகள்மூலம் சரிசெய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் நேரொத்த அறிக்கைகளில் உள்ள பெறுமதிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியமையினால் அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அவற்றை ஒப்பிட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) சேமிப்பு கணக்கொன்றிக்காக மீளாய்வாண்டில் பெற்ற ரூபா4,850,853 வட்டி வருமானம் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை. | வட்டி வருமானத்தை கணக்கில் பதிதல் தவறுதலாக தவறவிடப்பட்டது. இது முந்திய ஆண்டு சீராக்கம் மூலம் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக வட்டி வருமானத்தை கணக்கிட்டு கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஏனைய முற்கொடுப்பனவு மீதியினுள் இருந்த 2018 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா6,618,086 யும், மீளாய்வாண்டில் மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா25இ331இ256யும் தீர்ப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலத்திற்கு காலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் முற்கொடுப்பனவு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அதன்மூலம் இந்த பெறுமதிகள் குறைக்கப்படுமென. | முற்கொடுப்பனவு மீதிகளை சரியான நேரத்தில் கணக்குகளில் சீராக்குவதற்கும், பல ஆண்டுகளாக இருக்கும் பழைய மீதிகளை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஒக்டோபர் 25ஆம் திகதிய நிதி மற்றும் வெகுசன அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 5/2017 | சுற்றறிக்கையின்படி முனைப்பான சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் தொழிற்றுறை கொடுப்பனவுகளாக 2018 ஆம் ஆண்டு முதல் ரூபா 7,717,590அதிகமாக செலுத்தப்பட்டது. | 15,000/- பொறியியலாளர் கொடுப்பனவொன்று செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை பரிந்துரைக்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது எனவும், அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு கொடுப்பனவு செலுத்தப்பட்டதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி முனைப்பான சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் செலுத்தப்பட்ட தொழிற்றுறை கொடுப்பனவு சட்டவிதிகளுக்கு முரனானது என்பதனால் திரும்பப் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆகஸ்ட் 08 திகதிய நிதி அமைச்சின் தேசிய வரவுசெலவு சுற்றறிக்கை இல. 04/2022 இன் பந்தி 2.4 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகனுக்கு புறம்பாக, 2023ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் 106 அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர் மற்றும் அவர்களில் 61 பேர் நிரந்தரமாக்கப்பட்டனர். | துணைப் பதவியினர் இல்லாத காரணத்தால், தேவையான சேவைகளை வழங்குவதில் சிக்கல்களுக்கு முகங் கொடுத்தமையினால், தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2023 யூன் 05 ஆம் திகதியன்று நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில், முடிவுசெய்யப்பட்டது என. அதன்படி, ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி, தகுதியான 110 பேர் பதவியுயர்வு மற்றும் நியமனம் பெறப்பட்டுள்ளனர் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்ற வேண்டும் என்பதுடன் அத்தியாவசிய பணியாளர்களை ஆட்சேர்த்தல் திறைசேரி அனுமதியுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 இன் பந்தி 9.1 (ஆ) | ஒரு நபருக்கு ஒரு தடவையில் வழங்கப்படும் அதிகபட்ச முற்பணத் தொகை ரூபா 100,000 என்ற போதிலும், அந்த எல்லையை விஞ்சி 12 சந்தர்ப்பங்களில் ரூபா 125இ000 முதல் ரூபா 500இ000 வரையிலான | உரிய பிரிவுகளில் உள்ள வேறொரு ஊழியர் முன்பணத்தைப் பெற முடியாதபோது இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அது விசேட அங்கீகாரத்துடன் வழங்கப்படுவதற்கு | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையை விஞ்சி முற்பணம் வழங்க அவசியமெனின், திறைசேரி அங்கீகாரத்தின் பேரில் அதனை செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மொத்தம் ரூபா4இ148இ960 முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. | நடவடிக்கை எடுக்கப்படும் என. |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வங்கிக் கணக்குகளில் வைப்பு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,228,365 தொகையான 59 காசோலைகள் 1 மாதம் முதல் 11 மாதங்கள் வரையிலான கால வீச்சில் தேறப்படாமல் இருந்தன. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேறப்படாமல் இருந்த காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் செயலாற்ற வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயல்பாட்டு விளைவு ரூபா 16,596,485 இலாபம் ஈட்டப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 126,732,525 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா110,136,040 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டினை விட மீளாய்வாண்டில் கண்காட்சி வருமானம் ரூபா128,258,952 ஆலும், அரச அளிப்புகள் ரூபா92இ795இ000 ஆலும் அதிகரித்து இருந்த போதிலும், மூலதன அளிப்புகளுக்கான காலக்கழிவு ரூபா26இ250இ913 ஆல் குறைந்து விற்கும் மற்றும் விநியோகிக்கும் செலவுகள் ரூபா281இ429இ002 ஆலும் கண்காட்சி மாநாடு மற்றும் பண்டிகை செலவுகள் ரூபா20,579,223 ஆலும் அதிகரித்தமை என்பன இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான மாத்தறை வேலைத்தளத்துக்கு தேசிய கைவினைப் பேரவையினால் ரூபா3,850,740 பெறுமதியான 03 பொறிகளை தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டில் கட்டளை வழங்கப்பட்டிருப்பினும், வனப்பகுதியில் இருந்து பிரம்புகளை இழுப்பதற்கான ரூபா351,000 பெறுமதியான பொறி தவிர்ந்த, மற்றைய இரண்டு பொறிகளும் 2024 ஏப்ரல் இறுதியளவிலும் பணிகளை முடித்து கைவினைப் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | குறித்த பொறியை பரீட்சித்துப் பார்த்து பொருத்தமான நவீனமயப்படுத்தல் வேலைகளை செய்து உரிய நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | சபை நிறைவேற்ற வேண்டிய பணிப்பொறுப்புகளை உடனடியாக நிறைவேற்றுவதற்காக செயல்பாட்டு செயன்முறை உரியவாறு செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 திசெம்பர் 31ஆம் திகதியன்று இருந்த ரூபா 11,535,511 இனங்காணப்படாத வைப்பு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. | நிகழ்நிலை வைப்புக்கு சம பெறுமதியுடையதாக இருக்கும் போது நிகழ்நிலை வைப்பொன்று மற்றைய வைப்புகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காணுவது கடினம் என்பதால், தீர்க்க முடியாத பெறுமதிகள் ஹுநிழளவை ீநனெைபெ ளுநவவடநஅநவெ கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது என. | இனங்காணப்படாத வைப்பு மீதிகளை இனங்கண்டு உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில், விமலசுரேந்திர மின்நிலையத்தில் இருந்து அகற்றப்பட்ட பழைய உலோகங்களை கொள்வனவுசெய்வதற்கு ரூபா 3இ754இ298 செலுத்தப்பட்டிருந்ததுடன், பழைய செப்பு உலோகம் போதியளவு கிடைக்காத காரணத்தால் குறித்த பொருட்கள் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. அதன்படி, அத்தொகையை மீள பெறுவதற்கோ அல்லது பொருட்களை பெறுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அகற்றப்பட வேண்டிய பழைய பொருட்களை அகற்றி உரிய கைத்தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்ய தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என. | நிலுவைத்தொகையை பெறுவதற்கு அல்லது பொருட்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான 16 கைத்தொழில் பேட்டைகளில் (எல்பிட்டிய கைத்தொழில் பேட்டை தவிர்ந்த) 733 காணித் துண்டுகள் காணப்படுவதுடன் அவற்றில் 53 காணித்துண்டுகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் பல வருடங்களாக பாவனையின்றி காணப்படுகின்றன. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று, 26 தொழிற்சாலைகள் செயல்படாமல் மூடப்பட்டு இருந்ததுடன் அவற்றை ஏனைய கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. மேலும், சபைக்குச் சொந்தமான 05 கைத்தொழில் பேட்டைகளில் உள்ள 23 காணித்துண்டுகள் தனியார் வசிப்பிடத்திற்கு பயன்படுத்தப்பட்டன. | வெற்று காணித்துண்டுகள் உள்ள பேட்டைகளை அபிவிருத்திசெய்து புதிய முதலீட்டாளர்களை தூண்டுதல் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் என்பன கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனியார் குடியிருப்பாளர்களை தொழிற்சாலைகளுக்கு அனுப்புதல் அல்லது குறித்த காணித்துண்டுகளை புதிய முதலீட்டாளர்களுக்கு வழங்கும் நடவடிக்கை தொடர்கிறது என. | பயன்படுத்தாத காணித்துண்டுகள் மற்றும் தொழிற்சாலைகளை மற்றைய கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு மற்றும் தொழிற்சாலைகளை திறம்பட நடத்துவதற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய, அப /16/1424/723/039 இலக்க அமைச்சரவை முடிவு மூலம் அரசாங்க பங்களிப்புடன் புதிய முன்வார்ப்பு நிலையத்தில் நிறுவப்பட்ட ரொபோ தொழில்நுட்பத்திற்கான சிறப்பு நிலையம் பொருட்டு கட்டட நவீனபடுத்தல், சம்பளம் மற்றும் கூலி என ரூபா 51 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2018 இல் மற்றும் 2019 இல் ரூபா 35 மில்லியன் பெறுமதியான ரொபோ தொழில்நுட்ப உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ள போதிலும், தேவையான பணியாளர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பணிகள் தொடங்கப்படவில்லை. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இருந்த இந்த நிலையம் கைத்தொழில் அமைச்சுக்கும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில்,மீண்டும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் அவ்வப்போது மாற்றப்பட்டன. 2023 ஆம் ஆண்டில், இச்செயற்றிட்டம் பொருட்டு ஐசுடி 2600 றநடனனைபெ ிழறநச ளழரசஉந ஒன்றும், சுநிசழளளைபெ ழுக 45 நஒளைவவைபெ சுழடிழவ உநடட ஒன்றும் மற்றும் அதை பயன்படுத்த இரண்டு பொறியியலாளர்களுக்கு 04 நாட்கள் பயிற்சி அளித்தல் மற்றும் இதர செலவுகள் உட்பட இந்த செயற்றிட்டத்திற்காக ரூபா 5,164,149 உறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கையின் கைத்தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் ஆதரவளிக்கும் நோக்கில் இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அது 2023 திசெம்பர் 31 ஆம் திகதியளவிலும் செயற்படுத்தும் மட்டத்தில் இல்லை. | ரொபோ தொழில்நுட்பம் பொருட்டான சிறப்பு நிலையத்தை பொருத்தமான முறையில் நிறுவ நாங்கள் முயற்சித்த போதிலும், இந்த நிலையம் வெவ்வேறு அமைச்சுக்களின் கீழ் இருந்ததுடன், தற்போது இந்த நிலையத்தின் உரிமை சபையிடம் இல்லை.<br>எனினும், இந்த ரொபோ இயந்திரம் பழுதுபார்த்து எதிர்கால செயல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என. | செயற்றிட்டத்தை விரைவாக மீண்டும் ஆரம்பித்து அதன் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பேலியகொடை இறப்பர் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்துக்கு இறப்பர் சார்ந்த உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல், விரயத்தைக் குறைத்தல், உற்பத்திச் | தற்போது இங்ஜக்சன் மோல்டிங் இயந்திரம் பழுதுபார்க்கப்பட்ட வண்ணம் உள்ளது என. | இயந்திரத்தை பயனுறுவாக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | செயன்முறையின் செயல்திறனை அதிகரித்தல் மற்றும் உற்பத்திச் செலவைக் குறைத்தல், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களின் பயன்பாட்டை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களுடன் 2016 இல் ரூபா 9,318,026 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து, 328 பயிற்சியாளர்கள் மட்டுமே பயிற்சி பெற்றுள்ளனர் என்பதுடன் 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரையிலும் இது செயற்படுத்தும் மட்டத்தில் இல்லை. | | வேண்டும். |
| (ஆ) | பேலியகொட இறப்பர் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் 64 இறப்பர் தொடர்பான இயந்திரங்கள் இருந்தன என்பதுடன் அவற்றில் 26 இயந்திரங்கள் 1 வருடம் முதல் 39 வருடங்கள் வரையான கால வீச்சில் செயலிழந்திருந்துடன் மேலும் ரூபா 85,560 ஆன ஊழஅிசநளளழச பொறி 2017 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் பொதிகளிலேயே களஞ்சியத்தில் உள்ளது. மேலும், 17 வகையான மூலப்பொருட்கள் மற்றும் 284 வகையான இயந்திர உதிரி பாகங்கள 1 ஆண்டு முதல் 17 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் இருந்தன. | செயல்படாத இயந்திரங்கள், மூலப்பொருட்கள் மற்றும் உதிரிபாகங்களை அகற்றுவதற்காக பண்ட கணிப்பாய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. தற்போது பயன்படுத்தப்படும் மிகவும் பழைய கம்ப்ரசர் (ஊழஅிசநளளழச) செயலிழந்த சந்தர்ப்பங்களில், பழுதுபார்ப்பதற்கு நீண்டகாலம் நேரம் எடுப்பதனால் புதிய இயந்திரம் பயன்படுத்தப்படுவதுடன் எதிர்கால பயன்பாட்டிற்காக வைக்கப்படுகிறது என. | பயன்படுத்தப்படாத இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு உகந்த திட்டத்தை தயாரிப்பதற்கும் செயலிழந்த இயந்திரங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் யுனிடோ நிறுவனம் அமெரிக்க டொலர் 101,130 பெறுமதியான 12 இயந்திரங்களும் அமெரிக்க டொலர் 1167.44 பெறுமதியான பொருட்களும் சபைக்கு வழங்கப்பட்டு அவை லக்சல கட்டடத்தில் நிறுவப்பட்டு மூங்கிள் மரப் பயிற்சி நிலையம் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டது. 2022 செப்தெம்பர் மாதத்தில், இந்த பயிற்சி நிலைய கட்டடம் தேசிய கைவினைக் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டமையினால், அதிலிருந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அகற்றப்பட்டு கட்டுபெத்த நவபிம வளாகத்தில் | நவபிம வளாகத்தில் மூங்கில் மர பயிற்சி நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டாலும் தற்போது கட்டட பராமரிப்பு பணியை சிவில் பொறியியலாளர் துறை முடித்தவுடன் இயந்திரங்களை பொருத்தி பயிற்சி பணிகள் உடனடியாக தொடங்கப்படவுள்ளன என. | சொத்துக்களை பயனுறுவாக பயன்படுத்தவதற்கும் செயற்றிட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உள்ள கட்டடத்தில் மூடிவைத்தமையினால் அவை 2024 மே மாதமளவில் வரை பயன்படுத்தாமல் செயலற்ற நிலையில் இருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டில் செயல் திட்டத்தின்படி 07 பிரிவுகள் பொருட்டு திட்டமிடப்பட்டிருந்த 83 செயற்பாடுகளில் 18 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த செயற்பாடுகள் வருட ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டாலும் செயற்படுத்தும்போது இத்தகைய சிறு குறைபாடுகளை காணலாம் என. | தாக்கம் செலுத்தக்கூடிய சகல காரணிகளையும் கருத்திற்கொண்டு செயற்பாடுகளை திட்டமிட வேண்டும் என்பதுடன் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |